முச்சந்தி முரளி




"அக்கரைக்காரர் வாயால மட்டும் அக்கறை கொக்கறை எண்டுவினம், ஆனால் செயலில ஒண்டுமில்லையே"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 208

வெள்ளிக்கிழமை
21 ஜூன் 2024

ஆனி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# தமிழர் விடயத்தில் இந்தியா அக்கறை!

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று உறுதியளிப்பு



கொழும்பு, ஜூன் 21

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் அக்கறையுடன் செயற்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.


11


படைமுகாம்களை அகற்றி

# தமிழீழம் அமைக்க வடக்கில் முயற்சி!

## சிங்கள ராவயவின் உறுப்பினர் அக்மீமன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

வடக்கு - கிழக்கில் இருந்து படைமுகாம்களையும், பொலிஸ் நிலையங்களையும் அகற்றி, தமிழீழம் அமைப்பதற்குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சிங்கள ராவய அமைப்பின் உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள்


11




# 13 ஆவது திருத்தம்; அப்பன் சொத்தல்ல!

## சஜித்துக்கு பொன்சேகா மறைமுகமாகப் பதிலடி


விரிவு :- பக். 11


# விபத்தில் காயமடைந்த இளைஞர் நேற்றுப் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 21

விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வந்த இளைஞர் ஒருவர், சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். ஊர்காவற்றுறை, கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த ஜோர்ச் ஜான்சன் (வயது - 21) என்ற இளைஞரே இவ்வாறு


12


# ஆதரவற்ற பெண்ணுக்கு இளைஞர்கள் இறுதிச்சடங்கு

## ஆனைக்கோட்டையில் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஆதரவற்ற பெண்ணொருவருக்கு இளைஞர்கள் இணைந்து இறுதிச்சடங்கை நடத்திய முன்மாதிரியான சம்பவம் ஆனைக்கோட்டைப் பகுதியில்


11


# பல்லாயிரம் பக்தர்கள் சூழ தேரில் வந்தாள் நாகபூஷணி




விரிவு :- பக். 12





# யாழ்.பல்கலையை முடக்கி ஊழியர்கள் நேற்றுப் போர்!


விரிவு :- பக். 11


இலங்கையின் போர்க்குற்றங்கள்

# சாட்சியங்களைத் திரட்டும் நடவடிக்கை பயனற்றது!

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியங்களைத் திரட்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையின் முன்முயற்சிகளும், தீர்மானங்களும் அதுசார் நடவடிக்கைகளும் பயனற்றவை என்று இலங்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது அமர்வு தற்போது இடம்


11


# நெடுந்தீவில் ஒருவர் அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 21

நெடுந்தீவில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.


12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




நீண்டகாலமாக சிறைவாடும்

# அரசியல்கைதிகளை விடுவிக்கவேண்டும்

கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21
கொடிய சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடும் அரசியல் கைதிகள் மனவுளைச்சலுக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.
புதிய மகஸின் சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சென்று, அவர்களை நேரில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
புதிய மகஸின் சிறைச்சாலையில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அரசியல்கைதிகள் உள்ளனர். அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்காது அவர்கள் மீது புதிது புதிதாக வழக்குகளைத் தொடுத்து அவர்களை சிறைச்சாலைக்குள்ளேயே மரணிக்கச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.
பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது சர்வதேச விதிமுறைகளுக்கு மேலான ஒரு கொடிய சட்டம். அவ்வாறான ஒரு சட்டம் நீக்கப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ள போதும்இன்றுவரைகுறித்தசட்டம்நீக்கப்படாதுள்ளது.
கடந்த 29 வருடங்களுக்கு முன்னர் 19 வயதில் கைது செய்யப்பட்டோர் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டு சுமார் 2 ஆயுள் தண்டனைக் காலம் முடிவடைந்துள்ள நிலையிலும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.
எனவே அவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-56)

## இரு மாதிரிக்கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 21
20 மில்லியன் ரூபா செலவில், யாழில் இரு மாதிரி விவசாயக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.
கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் அல்வாய் கிழக்குப் பகுதியில் 10 மில்லியன் ரூபா செலவிலும், உடுவில் பிரதேச செயலர் பிரிவின் ஈவினைப் பகுதியில் 10 மில்லியன் ரூபா செலவிலும் நவீன நுட்பங்களின் அடிப்படையில் விவசாய மாதிரிக் கிராமங்கள் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-125)

# யானைவேலி அமைக்கக் கோரிக்கை



கிளிநொச்சி, ஜூன் 21
**மகிழங்காடு கமக்காரர் அமைப்புக் குட்பட்ட பகுதிகளில்வாழும் விவசாயிகள், தமது வயல் நிலங்களுக்கு யானை வேலி அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கடந்த செவ்வாய்க்கிழமை, மகிழங்காடு கமக்காரர் அமைப்புக்குட்பட்ட பகுதிகளில் புகுந்த காட்டுயானைகள், விவசாயிகளின் பல ஏக்கர் வயல் நிலங்களை நாசம் செய்துள்ளன. விதைத்து ஒன்றரை மாதங்கள் ஆன பயிர்களையே யானைகள் அழித்துள்ளதாகவும் காட்டு யானைகளால், தொடர்ச்சியாக தமது நெல் வயல்கள் அழிவடைவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
அத்துடன், உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தமக்கு யானைவேலி அமைத்துத்தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-113)

# முஸ்லிம்களின் உரிமை பறிப்பு விசாரணை நடத்தவேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 21
கொரோனாத் தொற்றுக் காரணமாக இறந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமாக எரிக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படை உரிமை பறிப்புச் செயலுக்கு எதிராக விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
கொரோனா காலத்தில் கோத்தாபய ராஜபக்ச ஓர் இனவாத கல்வியியலாளர் குழுவை நியமித்தார். இந்தக் குழு கொரோனா காரணமாக இறந்தவர்களின் சடலங்கள் எரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தது. ஆனால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிலைப்பாடு அவ்வாறு இல்லாதபோதும் இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே அவர் செயற்பட்டுள்ளார்.
அந்தவகையில், முஸ்லிம்களின் ஜனாஸாக்களைப் பலவந்தமாக எரித்து மீறப்பட்ட உரிமை மீறல் தொடர்பாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-6)

## ‘மலையகா’ அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
ஊடறு வெளியீடாகிய மலையகப் பெண்களின் சிறுகதைத் தொகுதி ‘மலையகா’ அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (ச-இ)

## பொதுக்கூட்டம்


மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட பொதுக்கூட்டம், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் தொழிற்பயிற்சி வளவாளர் எ.கமலேஷ் கலந்துகொண்டு, ‘மாற்றுத்திறனாளிகளும் பொருளாதாரத்தின் பங்காளிகள்’ எனும் தலைப்பில் ஊக்குவிப்பு உரை நிகழ்த்தினார். தொடர்ந்து, போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தரால் ‘போதையற்ற மகிழ்ச்சிகரமான குடும்பச் சூழலை உருவாக்குவோம்’ எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுச் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது. (ப-66)

# சஜித்தின் ஆலோசகராக தலால் ராபி நியமிப்பு

கொழும்பு, ஜூன் 21
எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, தலால் ராபியை தனது ஆலோசகராக நியமித்துள்ளார். தலால் ராபி சிறந்த பொருளியல் நிபுணர். சர்வதேச நாணயநிதியத்தின் பொது நிதி ஆலோசகராக நீண்டகாலமாகப் பணிபுரிந்து வருவதுடன் சர்வதேச பொருளாதார வலையமைப்பின் அங்கத்தவராகவும் உள்ளார்.
அத்துடன் தலால் ராபி இலங்கை மத்திய வங்கியின் கற்கைநெறிகளுக்கான வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்துவருவதுடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யு.எஸ் எயிட் போன்றவற்றின் திட்டங்களிலும் கடமையாற்றியுள்ளார்.
இவரது கட்டுரைகள் லண்டன் பொருளியல் கல்லூரி வெளியீடுகளிலும் சர்வதேச புகழ்பெற்ற போபர்ஸ் சஞ்சிகையிலும் பிரசுரமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

# ஊதிய முரண்பாடு தீர்வு தரவேண்டும்

கல்விசாரா ஊழியர்கள்
வவு.வில் சத்தியாக்கிரகம்



வவுனியா, ஜூன் 21
வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பம்பைமடுவிலுள்ள பல்கலைக்கழக வளாகம் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை அரசாங்கம் தீர்க்கவேண்டும் என வலியுறுத்தி தொடர்ச்சியாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வை, கொடுப்பனவை அதிகரி, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைநிரப்பு திட்டங்கள்: 875 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன் 21

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசால் இந்த ஆண்டுக்கான குறைநிரப்பு மதிப்பீடாக 875 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டில் இந்தத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக நிலவும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக அபிவிருத்தித் திட்டங்களின் பலன்களை கிராமப்புற சமூகங்கள் இழந்துள்ளன. இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விரைவாக முடிப்பதற்காக சேமிப்புகளிலிருந்து ரூபா 8 75 கோடி எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை உப கருத்திட்டங்களாக, மாகாண சபைகள் ஊடாக அபிவிருத்தி, இலங்கையின் தேசிய முத்திரை, அநுராதபுரம் மகா விகாரை பல்கலைக்கழகத்தை நிறுவுதல், அநுராதபுரத்தில் சர்வதேச பௌத்த நூலகம் ஒன்றை நிறுவுதல், கண்டியில் பௌத்த நாகரிகம் தொடர்பான அருங்காட்சியகத்தை நிறுவுதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. (ச-இ)



## பாலின சமத்துவம் தேவையற்ற ஒன்று

### கூறுகிறார் விமல்

பாலின சமத்துவ சட்டவரைவு, பாலின சிகிச்சை மாற்று வியாபாரத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தச் சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் ஆண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெண்களாகவும், பெண் உறுப்பினர்கள் ஆண்களாகவும் மாற்றமடைவதற்குத் தயார் என்றே கருத முடியும் -இவ்வாறு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:-

பாலின சமத்துவம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் கிடையாது. அரசமைப்புக்கு அமையவே நீதிமன்றம் ஆராய்ந்து தீர்ப்பளித்துள்ளது. பெண் சமத்துவத்துக்கும், மாற்று பாலினத்தவர்களுக்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. பாலின மாற்றம் என்பது மேற்குலகத்தில் நவீன கலாசாரமாகக் காணப்படுகிறது. மேற்குலகம் அவர்களின் கலாசாரத்தை அங்கு வைத்துக் கொள்ளட்டும். இலங்கை பௌத்த நாடு. பௌத்த கோட்பாடுகளில் திருநங்கைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறான நிலை ஏற்பட்டால் பிரச்சினைகள் தோற்றம் பெறும் - என்றார். (ச-இ)

## வடக்கு – கிழக்கு ரணிலுக்கே வாக்கு

### கருணா நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 21

வடக்கு- கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிப்பர். ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கே நானும் எனது கட்சியும் ஆதரவளிப்போம்.

-இவ்வாறு கருணா அம்மான் என அழைக்கப்படும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாம் பாராட்டவேண்டும், ஏனென்றால் அவர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பினார். அடுத்த வாய்ப்பையும் நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும்- என்றார். (ச-இ)

## எலிக்காய்ச்சலால் பெண்கள் பாதிப்பு

இலங்கையில் லெப்டோஸ்பிரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சலால் அதிகளவு பெண்கள் பாதிக்கப்படுவதாக சுகாதார அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். இது தொடர்பில் தொற்றுநோயியல் பிரிவின் மருத்துவ நிபுணர் துஷானி தபரேரா தெரிவிக்கையில்,

பல ஆண்டுகளாக பெண்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவதை நாங்கள் அவதானித்துள்ளோம். இந்தக் காய்ச்சலால் இந்த ஆண்டு இதுவரை 5 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் – என்றார். (ச-இ

## ரணில் தலைமையே நாட்டை நிமிர்த்தியது



### டீ. பி. ஹேரத் தெரிவிப்பு

அனைத்து அம்சங்களிலும் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமைத்துவம் பெரும் உதவியாக அமைந்தது என்று கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ. பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை மீண்டும் அனுபவமற்ற தரப்பினிடம் கையளித்து மீண்டும் பாதாளத்துக்கு கொண்டு செல்வதா என்பதை மக்கள் நன்கு சிந்தித்துத் தீர்மானிக்கவேண்டும்- என்றார். (ச-இ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு 11. 3 பில். டொலர் வருமானம்!

2023 ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக 2 இலட்சத்து 89 ஆயிரத்து 287 பேர் சென்றுள்ளனர். அவர்கள் 5 ஆயிரத்து 970 மில்லியன் அமெரிக்க டொலரை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர். தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார். இந்த வருடத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் மூலம் நாட்டுக்கு 5ஆயிரத்து970 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது.

அதற்கமைய கடந்த வருடத்தில் அமைச்சை பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 11.3 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு வேலை வாய்ப்பினூடாக கிடைத்துள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## தினம் தெரியுமோ?

உந்த டாக்குத்தர்மார் அரசாங்க ஆஸ்பத்திரியளுக்கு டிமிக்கி விட்டிட்டு, பிரைவேட் ஆஸ்பத்திரியளிலேயே நெடுக நிக்கிறதைப் பற்றி பட்சி அண்டைக்குச் சொன்னதெல்லோ. அதைப் பற்றி பட்சிக்கு நிறைய ரெலிபோன் கோல்கள் வந்தது. அதில ஒராள் ஆக்களுக்கு மட்டுமில்ல உந்த ஆடு, மாடுகளுக்கும் நாங்கள் இப்ப வைத்தியம் பாக்க பிரைவேட் கிளினிக்குகளுக்குத்தான் போகவேண்டிக்கிடக்கு. அதைப் பற்றி பட்சி ஒண்டும் பறையாதோ? எண்டு கேட்டார். அப்பிடி ஒரு கேள்வி வந்தபிறகும் பட்சி சும்மா இருக்க ஏலாதே. வடக்கில இருக்கிற சில கால்நடை ஆஸ்பத்திரியளுக்கு ஒரு விசிட் அடிச்சுப் பார்த்தா, அங்கையும் டாக்குத்தர்மார் இதே விளையாட்டுத்தான். அவை அரசாங்கக் கிளினிக்கில பெரிசா நிக்கிறேலை. ஒருநாளைக்கு நாலைஞ்சு கேஸ் மட்டும் அவையள் பாப்பினம். அதைவிட கொடுமை என்னெண்டால், அவைக்கு தொட்டாட்டு வேலை செய்ய நிக்கிறவைதான் வெட்டுறது, தைக்கிறது , ஊசி போடுறது எண்டு முழுவேலையளும் பாக்கினம். சிலவேளை மாட்டு டாக்குத்தர்களைச்சுப் போனாரெண்டால், இந்தத் தொட்டாட்டு வேலைக்காரர் ஒரே செக்கனில டொக்டரா மாறிடுவினமாம். அதுக்குப் பிறகு ஆடு, மாடுகளைக் கொண்டுபோனவையை நாட்டாமைத்தனம் காட்டி, ஏனடா இஞ்ச வந்தம்? எண்டு நினைக்கப் பண்ணிப்போடுவினமாம்.

அதிலையும் சில தொட்டாட்டு வேலைக்காரர், பெரியாக்களுக்குத் தெரியாமல் மேலதிக மாகக் காசுகளையும் கறக்கிறவையாம். "அதைவிட இஞ்சயில்லாம் வந்தால் இப்பிடி லைனில நிண்டு சாகோனும். பின்னேரத்தில போன் அடிச்சால், வீட்டையே வந்து செய்துவிடுவனே" எண்டு தங்கட போன் நம்பரைக் குடுத்து விடுவினம். வெட்னறி ஹொஸ்பிட்டலுக்கு வந்து இப்பிடி அல்லோலகல்லோலப்படுகிறதைவிட, பேசாமல் ஐநூறையோ, ஆயிரத்தையோ குடுத்தால் வீட்டை வந்து ஆடு, மாட்டைப் பாப்பினம் எண்டு சனங்களும் நினைக்கத் தொடங்கிட்டுதுகள். இது உந்தக் கால்நடை வைத்தியர்மாருக்கு இன்னும் வசதியாப் போட்டுது. மத்தியானத்துக்குப் பிறகு ஆக்களை வெட்னறி ஹொஸ்பிட்டல் பக்கம் கண்ணிலையும் காணேலாது. ஆக்கள் தங்கட கிளினிக்குக்குப் பறந்திடுவினம். அதால மத்தியானத்துக்குப் பிறகு ஆடு, மாடு, நாயளுக்கு வருத்தம் வந்தால் விடியும் வரைக்கும் காத்திருக்கோனும், இல்லாட்டி பிரைவேட் கிளினிக்குக்குப் போகோனும். அதுக்காக எல்லாரும் அப்பிடியில்லைத்தான். சில கால்நடை டொக்டர்மார் சிலவேளையளில நாலரை மணிக்குப் பிறகும் வெட்னறி ஹொஸ்பிட்டலில நிண்டு வேலை செய்யிறதும் உண்டு. ஆனால் ஒருசிலரால எல்லாருக்கும் தானே கெட்டபேர்.

ஆடு, மாடுகள் வாயில்லாப் பிராணியள். அதுகளுக்கு வாயைத் திறந்து என்ன வருத்தம் எண்டு சொல்லத்தெரியாது. அதை வளர்க்கிறவைக்குக் கூட அதுகளுக்கு என்ன செய்யுது, என்ன வருத்தம் எண்டு கண்டுபிடிக்க முடியாது. அதால ஆக்களுக்கு மருத்துவம் செய்யிறவையை விடவும், கால்நடை டொக்டர்மார்தான் கடும் கெட்டிக்காரர். ஆனால் அந்தக் கெட்டித்தனத்தை சனத்துக்கு பின்னேரம் மட்டும் நிண்டுகுடுத்தால் , பெரும் புண்ணியம் கிடைக்குமெல்லோ.



-பட்சி

padsi@uthayan.com

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கவும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி வரும். வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும். சிவபெருமானை வழிபட ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

# இங்கிலாந்து அதிரடி பணிந்தது மே.தீவுகள்



ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 'சுப்பர் -8' சுற்றில் இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது நடப்புச் சம்பியனான இங்கிலாந்து அணி.

மேற்கிந்தியத் தீவுகளின் செயின்ட் லூசியாவில் உள்ள டேரன் சம்மி கிரிக்கெட் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்து வீச முடிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

பிரண்டன் கிங் 23 ஓட்டங்களையும், சார்லஸ் 28 ஓட்டங்களையும், பூரன் 36 ஓட்டங்களையும், பவல் 36 ஓட்டங்களையும், ருதர்போர்ட் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஜோஸ் பட்லர் மற்றும் பிலிப் சால்ட் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்காக அவர்கள் 67 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். பட்லர் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் வந்த மொயின் அலி 13 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன்பின்னர் களமிறங்கிய ஜொனி பேர்ஸ்டோ அதிரடி காட்ட, சால்ட்டும் அவருடன் இணைந்து கொண்டார். இருவரும் அதிரடியாக ஆட 17.3 பந்துப்பரிமாற்றங்களில் வெற்றி இலக்கைக் கடந்தது இங்கிலாந்து அணி. பேர்ஸ்டோ 26 பந்துகளில் 48 ஓட்டங்களுடனும், சால்ட் 47 பந்துகளில் 87 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (எ)



# அராலி சரஸ்வதி வலைப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வலிகாமம் கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுகளின் வரிசையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற 16 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்துப் போட்டியில் முதலாம் இடம்பெற்று அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி சம்பியன் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், நான்காம் இடத்தை யூனியன் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (ச-555)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில், 'இலங்கை அரசியலில் சிவில் சமூகம் எனப்படுவோர் என்னதான் செய்கிறார்கள்?' எனும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும், கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. நிகழ்வில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.எஸ்.ஜீவசுதன், சமூக அரசியல் ஆய்வாளர் ம.செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-66)

# அலங்காரத் திருவிழா

சாவகச்சேரி, ஜூன் 21

கோயிற்குடியிருப்பு ஞானவீரபத்திரர் கோவில் அலங்காரத் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 6 ஆம் திகதி பகல் விசேட சங்கு முழக்கு இடம்பெற்று மாலை நகர்வலத்துடன் திருவிழா நிறைவுபெறும். (எ-25.9)

# சாவ. மருத்துவமனை அலகுகள் இடமாற்றம்

சாவகச்சேரி, ஜூன் 21

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட பெருமளவான அலகுகள் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் கடந்த இரண்டு வருடங்களாக மூடப்பட்டிருந்த விபத்து அவசர சிகிச்சை கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

மருத்துவமனை கட்டடங்கள் போர்க் காலத்தில் முழுமையாகச் சேதமடைந்தன. மீள்குடியமர்வின் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாக அலகு கட்டடத்தில் கடந்த 20 வருடங்களாக வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட அலகுகள் இயங்கி வந்தன.

மருத்துவமனைக்கு நிர்மாணிக்கப்பட்ட விபத்து அவசர சிகிச்சை அலகுகள் கடந்த இரண்டு வருடங்களாக மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் விபத்து அவசர கட்டடத்துக்கு புதிதாக மருத்துவப் பொறுப்பதிகாரியாக கடமையேற்றவரின் முயற்சியால் நிர்வாக அலகில் இயங்கிய எக்ஸ் றே அலகு தவிர்ந்த ஏனைய அலகுகள் மாற்றப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிலநடுக்கத்தால் நடுங்கும் வடக்கு

வவுனியாவில் கடந்த 18 ஆம் திகதி இரவு உணரப்பட்ட 2.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் வடபுலத்தே புதிய அச்சத்தை தோற்றுவித்திருக்கிறது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி என்ற மிக அருந்தலான ஒரு இயற்கைப் பேரிடரைத் தவிர இதுநாள்வரையும் மழை, வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அழிவுகளையே நாம் வழக்கமாக ஒவ்வொரு பருவநிலையிலும் சந்தித்திருந்தோம். சுமத்ரா தீவுகளில் உண்டான நிலநடுக்கத்தின் விளைவாகவே இந்தச் சுனாமி ஏற்பட்டிருந்தாலும், அதன் பின்னர் சுனாமியின் சுவடுகள் இலங்கைக் கடற்பரப்பை எட்டியும் பார்க்காதபோதும், இலங்கைக்கு அச்சுறுத்தலான இயற்கை அழிவுகளில் சுனாமியையும் இணைத்திருந்தோம். இப்போது வவுனியா சம்பவத்தோடு நிலநடுக்கத்தையும் இலங்கைக்கு ஆபத்தையும், அழிவையும் உண்டாக்கக்கூடிய பேரிடர்களில் ஒன்றாக இணைக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

புவியடுக்கு ஓடுகளின் மிக நுண்ணிய நகர்வால் ஏற்படும் உரசலே மிகப்பெரிய நிலநடுக்கங்களை உலகெங்கும் தோற்றுவித்துவருகின்றன. அத்தகைய நகரும் புவியடுக்குகளுக்கிடையே இலங்கை இருக்கவில்லை என்று இத்தனைநாளும் நிம்மதியாக இருந்தோம். ஆனால், அந்த நம்பிக்கையை வெறும் 2.3 ரிக்டரில் ஏற்பட்ட ஒரேயொரு அதிர்வு கலைத்துப் போட்டிருக்கிறது. இனிமேல் மெலிதான மேசை நடுங்கினால்கூட 'நிலநடுக்கமோ?' என நடுங்கவேண்டியசூழல். அதைவிட 'இதைவிடவும் ஆபத்தான நிலநடுக்கங்களை இலங்கை எதிர்காலத்தில் சந்திக்கவேண்டி இருக்கும். அதற்கான முன்னோட்டமே வவுனியா நில அதிர்வு' என்று சூழலியலாளர்களும், வானியலாளர்களும் தங்கள் பங்குக்கு அபாய அறிவிப்புகளை அடுக்கிக்கொண்டே செல்கின்றனர்.

மழைவெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்களை முன்னரே எதிர்வு கூறமுடியும். சில முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அந்தப் பேரிடர்களில் இருந்து தப்புவதற்கும் வழிவகைகள் இருக்கின்றன. ஆனால், நிலநடுக்கம் எப்போது நிகழுமென்று எவராலுமே எதிர்வுகூறமுடியாது. நினைத்தபோதெல்லாம் அது அதிரும். கட்டடங்களை அசைத்து விழுத்தும், உயிர்களைக் காவு கொள்ளும். எனவே எந்தநேரமும் இனிமேல் வடபுல மக்கள் நெஞ்சிடியோடுதான் இருக்கவேண்டும். நிலநடுக்கம் என்பது ஒருசில செக்கன்களே நீடிக்கும் நிகழ்வு. ஆனாலும் நினைத்தே பார்த்திராத பேரிடரை நிகழ்த்துவதற்கு அந்தச் சில செக்கன்களே போதுமானது. உயரமான கட்டடங்கள்தான் நிலநடுக்கத்தின் முதல் இலக்கு. அவைதான் சிறிய அசைவுக்கே நிலை குலைந்து, தாவீதின் சிறுகல்லுக்கே மல்லாந்து வீழ்ந்த கோலியாத்போல, பாறுண்டு வீழும் தன்மை கொண்டன. அந்தக்கட்டட வீழ்தல்கள்தான் பெரும் சொத்திழப்பையும், உயிரிழப்பையும் உண்டாக்கி நிலநடுக்கத்தை உயிர்குடிக்கும் பேரிடராக மாற்றுகின்றன.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் பல உயரமான கட்டடங்கள் இருந்தாலும் வடபுலத்தே அவ்வாறு மிக உயரமான கட்டடங்கள் சில காலங்களுக்கு முன்னர்வரை இருந்ததில்லை. வடக்கின் புவியியலின் தாங்குதிறனைக் கருத்திற்கொண்டு உயரமான கட்டடங்களுக்கு அனுமதி வழங்காத காலமொன்றிருந்தது. ஆனால், இப்போது வடக்கிலும் வானளாவிய கட்டடங்கள் நிமிரத் தொடங்கிவிட்டன. ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்திலேயே உயரமான கட்டடமென்ற பெருமை, குருநகரில் உள்ள ஐந்துமாடிக் குடியிருப்புக்கே இருந்தது. ஆனால், இப்போது அதனை விடவும் பலமடங்கு உயரமான கட்டடங்கள் யாழ்ப்பாணத்தில் முளைத்துவிட்டன. இந்த உயரமான கட்டடங்கள் மிகக்குறுகலான நிலப்பரப்பிலேயே, நிறைவான பல சேவைகளைப் பெறுவதற்கான அனுகூலங்களைக் கொண்டிருக்கவே செய்கின்றன. நிலப்பயன்பாட்டையும் நீடிக்கச்செய்கின்றன. இருப்பினும் இப்போது அதற்கு ஆப்பு வைப்பது போல நிலநடுக்கம் வந்துவிட்டதே. எனவே இனிமேல் வடக்கில் பாதிப்பை ஏற்படுத்தாத, நிலநடுக்கத்துக்கும் நின்றுபிடிக்கக்கூடிய கட்டடங்களை அமைப்பதை உறுதிசெய்யவேண்டும். அப்போதுதான் நிலநடுக்கம் அதிகளவான வீச்சில் நிகழ்ந்தாலும், பேரிழப்பு ஏற்படாமல் தப்பமுடியும். இனிமேல் கட்டடங்களை அமைப்போரும் அனுமதி கொடுப்போரும் இவற்றைக் கருத்திற்கொள்வது நலம்.






# குறைமதிப்புக்குள்ளாகும் நீதித்துறைக் கட்டமைப்பு

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

**கொழும்பு, ஜூன் 21**

**பாலின சமத்துவ சட்டவரைவுக்கான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை ஏற்படுத்துவது ஆபத்தான முன்னுதாரணமாகும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாலின சமத்துவ சட்டவரைவு குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைச் சாடும் விதத்தில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்து உயர்நீதிமன்றத்துக்கும் நாட்டின் நீதி அமைப்புக்கும் அச்சுறுத்தலானது.

ஜனாதிபதியின் கருத்தும் நடவடிக்கைகளும் நீதித்துறையின் சுதந்திரத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும் நோக்கத்திலானது. நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் வெளி அழுத்தங்கள் இல்லாமலும் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றமோ நிறைவேற்றதிகாரமோ மக்களுக்கான கடமையை நிறைவேற்றுவதற்காக நீதித்துறையை விமர்சிக்கக்கூடாது. இது நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் - என்றுள்ளது. (ச-இ)

# பியூமி கணக்குகள் சி.ஐ.டி. விசாரணை



திட்டமிட்ட குற்றச்செயல்கள்மூலம் சொத்துகளைச் சம்பாதித்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கமைய நடிகையும், மொடல் அழகியுமான பியூமி ஹன்சமாலியின் 19 கணக்குகளின் பதிவுகளைப் பெறுவதற்கு மாளிகாகந்த நீதிவான் மஞ்சுள திலகரத்னகுற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு அனுமதிவழங்கியுள்ளார். பியூமி ஹன்சமாலியின் இந்த வங்கிக் கணக்குகள் எட்டு முன்னணி வங்கிகளில் உள்ளன. 80 மில்லியன் ரூபா பெறுமதியான ரேஞ்ச் ரோவர் ரக வாகனம் மற்றும் 140 மில்லியன் ரூபா பெறுமதியான கொழும்பில்வீடுஉள்ளிட்ட சொத்துகளைதிட்டமிட்ட குற்றச்செயல்கள் மூலம்பியூமிஹன்சமாலிபெற்று வைத்துள்ளார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள நிலையில் விசாரணை நடத்தப்படுகின்றது. (ச-இ)

# மைத்திரிக்கு மீளவும் தடை

கொழும்பு, ஜூன் 21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரைநீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்துள்ளது. (ச-இ)

# இலங்கைக்கு சீனா ஆதரவு

கொழும்பு, ஜூன் 21

இலங்கையின் கடன் நிலைத்தன்மைக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கப்படும் என்று சீனா தெரிவித்துள்ளது.

சீனத் தலைநகரில் நடந்த விசேட செய்தியாளர் சந்திப்பில் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் தெரிவித்துள்ளார். (எ-இ)

# 1,700 ரூபா அவசியம்

கொழும்பு, ஜூன் 21

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவரும் இணைந்து தோட்டத் தொழிலாளர்களுக்குஅதனைபெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். 1700 ரூபா சம்பளம் அவர்களுக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடியில் போதுமானதாகக் கருதவில்லை. ஆயினும் அதையாவது பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நாளை

22.06.2024

**சனிக்கிழமை**

**ஆனி - 08**

சுபநேரம் : 02.54 - 04.24

ராகுகாலம் : 08.54 - 10.24

## நாளொரு நல்வார்த்தை

**அறிவின்மை கேவலம்**
**அதைவிடக் கேவலம் அதிக**
**மனமின்மை.**

**-ஜேம்ஸ் ஆலன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மத்தியவங்கி ஊழியர்*

# ஊதிய அதிகரிப்பு சட்டத்துக்கு முரண்

*துறைசார் குழு அறிக்கை*



கொழும்பு, ஜூன் 21
மத்தியவங்கியின் உயர் மற்றும் கீழ் நிலை சேவையாளர்களின் சம்பளம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்துக்கு அமைய ஒரேநிலையில் அதிகரித்துள்ளமை தவறாகும். இந்த அதிகரிப்பு அவசியமற்றது. இதனை உடனடியாகத் திருத்தம் செய்யவேண்டும் என்று அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் மத்தியவங்கியின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவினர் சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பில் அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் அறிக்கையை சபைக்குச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மத்தியவங்கியில் சேவையாற்றுவதால் இவர்களின் சம்பளத்தை விருப்பத்துக்கு அமைய அதிகரிக்க முடியாது. சம்பளம் அதிகரிக்கப்பட்ட போது நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து மத்தியவங்கி விசேட கவனம் செலுத்தியிருக்கவேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.

ஆகவே ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டமை திருத்தம் செய்யப்படவேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# தமிழக மீனவரை விடுவிக்க அழுத்தம் வழங்கவேண்டும்

## ஜெய்சங்கருக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்

**கொழும்பு, ஜூன் 21**

**இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழக மீனவர்கள் நால்வர் இலங்கைக் கடற்படையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டனர். அவர்களது மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டன. இத்தகைய சம்பவங்கள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதாக அமைகிறது. இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் தற்போது 15 மீனவர்களும் 162 மீன்பிடிப் படகுகளும் உள்ளன.

குறித்த மீனவர்களை விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு இந்தவாரம் வருகை தரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும்

*எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு*



கொழும்பு, ஜூன் 21
யாழ்.மாவட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை, பொலிகண்டி என்ற இடத்தில் அதிகளவான மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம் இலங்கைக் கடற்பரப்பில் இழுவை மடி மூலம் மீன்பிடியில் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் இழுவை மடி மீன்பிடி அங்கு இடம்பெற்று வருகின்றது. இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? இதனால் மீன் வளத்துக்கும், கடற் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன.

எனவே இதுதொடர்பில் துறைசார் அமைச்சர் கவனம் செலுத்தி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவேண்டும் - என்றார். (ச-இ)

# சிறுபோக தானியச் செய்கைக்கு ரூ. 9.6 மில்லியன் நிதி ஒதுக்கீடு

*கிளி. பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஜூன் 21
இரணைமடு பிரதேசத்தை அண்டி மேற்கொள்ளவுள்ள சிறுபோக தானியச் செய்கைக்காக 9.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி ஜெகதீஸ்வரி சூரியகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரணைமடுவை அண்டிய பகுதிகளில் இரணைமடு நீர்விநியோகத்தைப் பயன்படுத்தி 670 ஏக்கர் நிலப்பரப்பில் பயறு, கௌப்பி, உளுந்து, நிலக்கடலை ஆகிய தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இந்தப் பயிர்ச்செய்கைக்கு இன்னும் சில தினங்களில் விவசாயிகள் சிலர் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்படுவர் - என்றார். (ப-125)

# பொலிஸ் ஆணைக்குழு பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கு இலங்கை நாடாளுமன்றம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களோ, உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களோ இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

நீதிச்சேவை அதிகாரிகள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் தமது பதவியைவிட்டு விலகியதாகக் கருதப்படுவர்.

இலங்கை நாடாளுமன்ற www.parliament.lk என்ற இணையத்தளத்தில் விண்ணப்பத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பதாரிகள் தமது மின்னஞ்சலின் இடதுபக்க மேல் மூலையில் பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# வேலைவாய்ப்பு மோசடி; 2,155 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 21
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் இதுவரையான காலப்பகுதியில் 2155 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

11 சட்டவிரோத வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் 65 சந்தேகநபர்களும் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடி தொடர்பில் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மத்தியவங்கி ஊதிய உயர்வு அரசின் நடவடிக்கை என்ன?

## எதிர்க்கட்சி கேள்வி



மத்தியவங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தவறானது என ஜனாதிபதி நியமித்த துறைசார் குழு நிரூபித்துள்ளது. எனவே மத்தியவங்கியின் உயர் அதிகாரிகள் உடன் பதவி விலகவேண்டும் .

-இவ்வாறு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ள போது மத்தியவங்கி ஊழியர்களின் சம்பளம் 75 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. மத்தியவங்கியின் சம்பள அதிகரிப்பை நாடாளுமன்றமே அனுமதிக்கவேண்டும். ஆனால் மத்தியவங்கி சுயாதீனத்துக்காக இயற்றப்பட்ட சட்டத்தை பயன்படுத்தி மத்தியவங்கி தனக்கு ஏற்றாற்போல் சம்பளத்தை அதிகரித்துள்ளது. இந்த முறையற்ற செயற்பாடுகள் தற்போது வெளிப்பட்டுள்ளன. ஆகவே மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் உடன் பதவி விலகவேண்டும். மத்தியவங்கியின் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (ச-இ)

# 3 கால்களுடன் கோழிக்குஞ்சு

சாவகச்சேரி, ஜூன் 21
மூன்று கால்களுடன் கோழிக்குஞ்சு ஒன்று சாவகச்சேரியில் பிறந்துள்ளது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவரின் வீட்டில் இந்தக் கோழிக்குஞ்சு அவதானிக்கப்பட்ட நிலையில் கால்நடை மருத்துவர் அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# 17 நாள்களில் 62,612 சுற்றுலாவிகள்

இந்த வருடத்தின் ஜூன் மாதத்தின் முதல் 17 நாள்களில் 62,612 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 9 இலட்சத்து 59 ஆயிரத்து 391 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் யாசகர்கள் பெரமுனவினர் அல்லர்

## ரணிலிடம் கொதித்தார் பஸில்



**கொழும்பு, ஜூன் 21**

**நாங்கள் அரசியல் யாசகர்கள் அல்லர். நீங்கள் தனிவழி செல்வதாக இருந்தால்கூட எமக்குப் பரவாயில்லை - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கடும் சீற்றத்துடன் பஸில் ராஜபக்ச கருத்து வெளியிட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட கூட்டமொன்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் நடைபெற்றுள்ளது. அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சாகல காரியவசம், பஸில் ராஜபக்ச உள்ளிட்டவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதனை எதிர்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ராஜபக்சக்களை இணைத்துக்கொள்வதற்கு தாம் எதிர்ப்பு என நிமல் லான்சா அணி மற்றும் துமிந்த திஸாநாயக்க அணி என்பன தெரிவித்துள்ளன. 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது வெளியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியதுபோல ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு தமது அணிகளுக்குப் பிரச்சினை இல்லை எனவும் மேற்படி தரப்புகள் அறிவித்துள்ளன.

இதனால் கோபமடைந்த பஸில் ராஜபக்ச, "ராஜபக்சக்கள் என்றால் யாரென நினைத்துக்கொண்டிருக்கின்றீர்கள்? ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப செயற்படுவதற்கு நாம் தயாரில்லை. நாம் அரசியல் யாசகர்கள் அல்லர். ஜனாதிபதி அழைப்பு விடுத்தால்தான் இச்சந்திப்புக்கு வந்தேன். நாமல் உட்பட எமது கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றபோதிலும் நான் சந்திப்புக்கு வந்தேன். எமது அரசியலை நாம் தனியே செய்கின்றோம். எவ்விதப் பிரச்சினையும் இல்லை" - என்று குறிப்பிட்டுள்ளார் என அறியமுடிகின்றது. (ம-44)

ஒரேநாளில் பிரிட்டனுக்குள்

# படகு மூலம் 882 பேர்!




லண்டன், ஜூன் 21

அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பிரிட்டனுக்கு ஒரேநாளில் 882 பேர் சென்றுள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு 947 பேர் இந்தக் கால்வாயைக் கடந்த நிலையில், தற்போது கிட்டதட்ட இணையான ஒரு குழு ஆங்கிலக் கால்வாயைக் கடந்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் சிறிய படகுகள் மூலம் பிரிட்டனுக்குள் 12 ஆயிரத்து 313 பேர் நுழைந்துள்ளனர். இது கடந்த ஆண்டைவிட 18 விகிதம் அதிகமாகும்.

'சிறிய படகுகளை நிறுத்துவோம்' என்று பிரிட்டன் அரசாங்கம் உறுதியளித்துள்ளபோதும், இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி பதிவாகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## விநாயகத்துக்கு அஞ்சலி




கொடிகாமம், ஜூன் 21

யாழ்ப்பாணம் வரணியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட முன்னாள் போராளியான விநாயகத்துக்கு அவரது சொந்த ஊரில் நேற்று ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

விநாயகம் சுகவீனம் காரணமாக கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் பிரான்ஸில் நேற்று இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. (ம-159)

## ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய விவகாரம்: விசாரணைக்குழு அமைப்பதற்குப் பணிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பாடசாலையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும், நிதி, நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக சுயாதீன விசாரணைக்குழுவை அமைத்து விரிவான அறிக்கை வழங்குமாறு வடமாகாண பிரதம செயலாளர் முல்லைத்தீவு மாவட்டச் செயலரைப் பணித்துள்ளார்.

குறித்த பாடசாலையில் நிர்வாக, நிதி முறைகேடு தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தது. எனினும் அவை தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சு மௌனம் காத்து வந்த நிலையில், வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கு குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைக் குழு ஒன்றை அமைத்து தனக்கு விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உமாமகேஸ்வரனுக்கு எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பி உள்ளார். (ம-27)

காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நல்லூர் நாயன்மார்கட்டில் செம்மணிவீதிக்கு அருகில் இராமநாதன் வீதியில் 1 பரப்பு 12.5குழி (1 துண்டு) அல்லது 3 பரப்பு 7குழி (2துண்டு) விற்பனைக்குண்டு. நல்லூர் கோவிலில் இருந்து 2KM மிகச்சிறந்த நீர், நிலவளம் உள்ள காணி.

தொடர்புகளுக்கு: 077 514 9210

(C5789) S-1

கரைதுறைப்பற்று பிரதேசசபையின்

## முன்னாள் தவிசாளரிடம் ரி.ஐ.டி.யினர் விசாரணை

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினருமான க.விஜிந்தன், பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்ட அவரிடம் சில மணிநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக நேற்றும் அவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார். (ம-19)

யா/கட்டுடை சைவ வித்தியாசாலையின் மணிவிழா வாழ்த்து



Best Wishes

திருமதி நிர்மலராணி பிரபாகரன்

Congratulations

சேவைக்கால விவரம்

- 02.01.2000 - 13.06.2001 யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
- 14.06.2001 - 30.06.2003 கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
- 01.07.2003 - 31.12.2013 யா/ஆனைக்கோட்டை R.C.T.M பாடசாலை
- 02.01.2014 - 21.06.2023 வரை யா/கட்டுடை சைவ வித்தியாசாலை

எமது ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்புற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் பாடசாலைச் சமூகம்
யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை

(cs 55440) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
05
.
11
.
1930



உதிர்வு
22
.
05
.
2024

## அமரர் சின்னப்பு ஆறுமுகம்

அன்பின் சிகரமே
வாழ்வின் ஒளி விளக்கே, எம் குடும்பத் தலைவனே !
எம் வாழ்வின் வழிகாட்டிய தீபமே !
காற்றிலே கலந்து நாட்கள் முப்பத்தொன்று ஆனாலும்
காலடி தழைக்கும் உம் நினைவுகள்.
எம் மனத்திரையினுள்ளே முளையரும்பி கொடியாய்
மலர்ந்து மணம் வீசியபடி என்றும் இருப்பீர்கள்
தோழிலே தெளித்த பாசத்தூறல்கள் ..........
வாழ்வில் ஆயிரமாயிரம் கண்கள் ஓரம்
கண்ணீர்த் துளிகளாய் நீங்கள்
தீண்டும் பொருளெல்லாம் நீங்கள்தானே ஐயா .....
மறைந்து மாதமொன்று ஆனபோதும் சிறகிழந்து
தவிக்கின்றோமே .....
ஐயா ...... உங்கள் நினைவலைகள் என்றும் எம் நெஞ்சினில்
நீங்காமல் நிலைத்திருக்கும் .........
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
28
.
02
.
1967



மறைவு
18
.
06
.
2024

## அமரர் ஆறுமுகம் கணேசமூர்த்தி

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில்
ஆழ்த்திச் சென்றீரோ? கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த்துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0771345605
0776391041

தகவல் : குடும்பத்தினர்
பிடாரி கோவிலடி, கொக்குவில்
மேற்கு, கொக்குவில்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
31
.
12
.
1931



மறைவு
18
.
06
.
2024

## திருமதி சரஸ்வதி கிருஸ்ணமூர்த்தி

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் (18.06.2024) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பத்மாவதி, துரைராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சிவனேசர், பகவதி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் மேகலா, ஜெயலிங்கம், சுஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதாபன், கஜானன், கார்த்திகன் ஆகியோரின் ஆசைப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலட்டிலேன்
வட்டுதென்மேற்கு
வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்.
077 400 7248

(CR 42689) S-1

# மரண அறிவித்தல்

மண்ணில்
07
.
10
.
1986



விண்ணில்
10
.
06
.
2024

## அமரர்.செல்வன் சண்முகவேல் தேவகுமாரன்

(உரிமையாளர் City Express யாழ்-கொழும்பு)

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர்.செல்வன் சண்முகவேல் தேவகுமாரன் அவர்கள் கடந்த (10.06.2024) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா சித்திரவல்லி மற்றும் காலஞ்சென்ற இராசதுரை மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சண்முகவேல் பராசக்தி தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் கிருபாகரன், கருணாகரன், பரந்தாமன், காலஞ்சென்ற பார்த்தீபன் ஆகியோரின் சகோதரனும், கார்த்திகா, ஜெயந்தி, வசந்தினி ஆகியோரின் மைத்துனரும் அப்சரா, அர்ஜீன், அஸ்மி, அக்ஷான், அக்சயா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2024) வெள்ளிக்கிழமை ACCRAGHANA இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரர்கள்

கார்த்திகேய வித்தியாசாலை வீதி
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

பரந்தி: 077 908 0435

(CR 42690) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வரையறுக்கப்பட்டது

**அறிவித்தல்**

**பொதுச் சபைக் கூட்டம்**

**23.06.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை**

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவுக்காக பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 23.06.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இல 127, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்பதனை சகல பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கும் அறியத்தரப்படுகின்றது.

இல. 127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
21.06.2024

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
செயலாளர்

(CR/42686) J-1


# ஆப்கானை அபாரமாக வீழ்த்தியது இந்தியா!




ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ஆப்கானிஸ்தானை அபாரமாக வீழ்த்தியது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 20 ஓவர்களில் இந்திய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரர்களான ரோகித் 8 ஓட்டங்களுடனும், கோலி 24 ஓட்டங்களுடனும் (24 பந்துகளில்) ஆட்டமிழந்து ஏமாற்றினாலும் சூரியகுமார் யாதவ் பெற்ற 53 ஓட்டங்களுடனும், ஹார்திக் பாண்டியா பெற்ற 32 ஓட்டங்களுடனும் இந்திய அணி மீண்டெழுந்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி ஆரம்பம் முதலே முக்கியமான விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அந்த அணி 134 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 47 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பும்ரா மற்றும் அர்ஷ்டிப் சிங் இருவரும் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள். பும்ரா 4 ஓவர்களை வீசி வெறும் 7 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தார். (ம)


**நாஹா மருத்துவ நிலையம்**

நீரிழிவும் அதனது ஹோமா நிலையும், கை, கால் செயலிழப்பு, மூட்டுக்கள் தேய்வு, அல்சர், தீராத புண்கள், ஆஸ்மா, குழந்தையின்மை - அதிவிசேட மருந்தியல்.

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதி வீடு) மானிப்பாய்.



**வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு**

கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 417 9120, 076 358 2126, 076 225 4729
Whats app:- 0091 915 954 0807

(CS/55418) J-1



## மரண அறிவித்தல்

**செல்லத்துரை கணேசமூர்த்தி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



தோற்றம் 21.12.1945 — மறைவு 19.06.2024

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணேசமூர்த்தி புதன்கிழமை (19.06.2024) அன்று காலமானார். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உலவிக்குளம் பிள்ளையார் கோயிலடி
அச்சுவேலி தெற்கு
அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்.

(CR 42687) V-1



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27.07.1962 — மறைவு 12.07.2022

**அமரர் வடிவேலு பாலசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற - பேணர் (Burner) - சிமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை, உரிமையாளர் - ஜெயசக்தி மருந்தகம் - மருதனார்மடம்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கடந்த 12.07.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் இன்று (21.06.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

வள்ளிமனை,
அல்லொல்லை வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
077 191 1062

(CS/55423) J-1



## கண்ணீர் அஞ்சலி



**சண்முகவேல் தேவகுமாரன்**
(City Express உரிமையாளர்)

பிறப்பு 07.10.1986 — இறப்பு 10.06.2024

தாய் தந்தைக்கு கனிஷ்டபிள்ளை
அனைவருக்கும் செல்லப்பிள்ளை
உனை விரும்பாதோர் யாருமில்லை
வெறுப்போர் என்று எவருமில்லை
கொடிய நோய் கொண்டு நீபோக
குறையுண்டோ நாங்கள் சொல்ல இனி
நீயின்றி எங்கள் இதயம் வெதும்புதப்பா!
கலங்குதையா உறவுகள் உமைக்
காணத்துடிக்குது கண்கள்
தவிக்கின்றனர் நண்பர்கள் உறைந்திருக்கும்
அவர் இதயங்கள் போய்வா
அன்புத் தேவா...
தேவன் மடிதனில் சரணடையும்
"குமரா" உன் ஆத்மா
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

உன் பிரிவால் துயரமடையும்
மாமன்
துரைத்தினம் (குணம்)
(மீராம்பாள் ரான்ஸ்போட்)

(CS/55439) J-1




அராலி மேற்கு, நீளத்திகாடு அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம், கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. பூஜை வழிபாடுகளை துஷ்யந்த குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தி வைத்தனர். (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளுக்கு பலகாரம்

கொழும்பு, ஜுன் 21

பொசனை முன்னிட்டு இரண்டு நாள்கள் சிறைக்கைதிகளின் உறவினர்கள் உணவுகளையும், பலகாரங்களையும் வழங்கலாம் என சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார். உரிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உணவுகளை எடுத்துச் செல்லலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ம-6)

## சர்வதேச யோகா தினம்



மன்னார், ஜுன் 21

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, 'பெண்கள் வலுவூட்டல்களுக்கான யோகா' எனும் கருப்பொருளில், மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரி மைதானத்தில் யோகா தின நிகழ்வுகள், நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி, யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், மேற்படி கல்லூரியின் முதல்வர் அருட் சகோதரர் மனோ, நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-56)



# சமாதான நீதிவானாக நியமனம்

யாழ்ப்பாணம், ஜுன் 21

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் வழங்கப்பட்ட நியமனத்துக்கமைவாக ஓய்வுபெற்ற பல்கலைக்கழகப் பதிவாளர் ப.முருகவேல் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாஸ் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் 1988 - 1993 காலப் பகுதியில் உதயன் பத்திரிகை அச்சக மேற்பார்வையாளராகப் பணியாற்றியதுடன் சர்வதேச, தேசிய மெய்வன்மைப் போட்டிகளின் தீர்ப்பாளராகவும், இலங்கை கிரிக்கெட் அமைப்பால் தரப்படுத்தப்பட்ட கிரிக்கெட் மத்தியஸ்தராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சாவகச்சேரியில் தொழிற்சந்தை

சாவகச்சேரி, ஜுன் 21

தென்மராட்சிப் பிரதேச தொழில் முனைவோருக்கான தொழிற்சந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய இந்தத் தொழிற்சந்தை பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

இதில் உள்ளூர் தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தொழில் பயிற்சி நிறுவனங்கள் கலந்துகொண்டு இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகள், தொழில் வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளை வழங்கின. (ச-9)



# விருது வழங்கல்




யாழ்ப்பாணம், ஜுன் 21

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் பிரதம குரு இராமசூரிய பிரபாகரக் குருக்கள் மற்றும் மாதகல் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய மஹோற்சவ குரு சிவஸ்ரீ. இரத்தின ஐயர் மாணிக்கவாசகக் குருக்கள் ஆகியோர் 'மூத்த சிவாச்சாரியார்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 16 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வின் போதே இருவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ப-66)



தற்போது லண்டனில் வசிக்கும், யாழ்.நடேஸ்வரா கல்லூரியின் பழையமாணவர்கள், தமது அறக்கட்டளை நிதியத்தின் ஊடாக 10 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு கணினிகளை, பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ப-100)

# குத்துச்சண்டைப் போட்டிகளில் ஒமேகா ஊழியர்கள் சாதனை

வவுனியா, ஜுன் 21

'ஒமேகா லைன் வவுனியா அப்பரெல்ஸ்' ஆடைத் தொழிற்சாலை நிறுவனத்தின் ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற குத்துச் சண்டைப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்த நிறுவனத்தில் முதன் முறையாக குத்துச்சண்டை விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக முன்னாள் குத்துச்சண்டை வீரரும் தற்போதைய தேசிய குத்துச்சண்டைப் பயிற்றுவிப்பாளருமான முடியப்பு நிக்சன் ரூபராஜ் பயிற்சிகளை வழங்கியிருந்தார்.

கொழும்பில் நடைபெற்ற பீ.ஏ.எஸ்.எல். நொவைஸ் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் ர.டேஸ்மிகாந்த் (82-89 kg) வெள்ளிப்பதக்கத்தையும், பு.மதிகரன் (48-51 kg) வெண்கலப்பதக்கத்தையும், பெண்கள் பிரிவில் கு.கவியாழினி (57-60 Kg) வி.காயத்திரி (48-51Kg) ரா.வளர்மதி (48-51 Kg) ஆகியோர் வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர்.

வடமாகாண ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் பெண்கள் பிரிவில் ஜெஸ்மிதா (64-69 kg) தங்கப்பதக்கத்தையும், கு.கவியாழினி (57-60 Kg) வி.காயத்திரி (48-51 Kg) ந.ஜதுர்சிகா (64-69 Kg) ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், ரா.வளர்மதி (48-51Kg) வ.றோசினி (54-57Kg) சு.சுதர்சினி (48-51 Kg) ஆகியோர் வெண்கலப்பதக்கங்களையும், ஆண்கள் பிரிவில் பு.மதிகரன் (48-51 Kg) தங்கப்பதக்கத்தையும், ச.துஷ்யந்தன் (67-71 Kg) சு.சுபிட்ஸன் (60-63 Kg) ச.யதுகுலன் (75-80 Kg) ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர். (எ-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 ஆவது...

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறும் ஜனாதிபதி வேட்பாளருக்கு வடக்கு மற்றும் தெற்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அத்துடன், பெயர் குறிப்பிடாது மறைமுகமாக சஜித் பிரேமதாஸ மீது சரமாரியாக அவர் சபையில் சொற்கணைகளைத் தொடுத்தார். 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அப்பன் வீட்டுச் சொத்து அல்ல எனவும் சாடினார்.

நாடாளுமன்றத்தில் பொன்சேகா நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு எதிரணிப் பிரதம கொறடாவிடம் நேரம் கோரியிருந்தேன். எனக்கு நேரம் ஒதுக்கவேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் பதிலளித்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித்துக்கு சார்பாக வேலை செய்வீர்களா எனவும் வினவினார். இறுதியில் எனக்கு நேரம் வழங்கவில்லை. எனினும், ஆளுங்கட்சியிடம் பேசி நேரத்தைப் பெற்றுக்கொண்டேன்.

நாம் மக்களுக்கு சாராயம் கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதும் கிடையாது. கொழும்பில் உள்ள கசினோக்காரர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு பாடசாலைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் பொருள்களை வழங்குவதும் கிடையாது. இப்படிச் செய்பவர்கள்தான் நாட்டின் தலைவராகப் பார்க்கின்றனர். கட்சித் தலைவர் என்பதற்காக ஆட்சி அதிகாரத்தை வழங்கும் முடிவை எடுத்தால் அது நாட்டுக்கே பாதகமாக அமையும்.

தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக சிலரை ஜனாதிபதியாக்க முடியாது. இது தொடர்பில் மக்கள் சிந்தனையுடன் செயற்படவேண்டும். பொருள்களைப் பகிர்பவர்களைவிடவும் சிறந்த தலைவரையே மக்கள் தெரிவுசெய்ய வேண்டும்.

ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற கனவில் இருப்பவர்கள், வடக்குக்குச் செல்கின்றனர். 13 வழங்கப்படும் என உறுதியளிக்கின்றனர். தெற்கில் யார் எதிர்த்தாலும் 13 வழங்கப்படுமாம். அப்படி வழங்குவதற்கு 13 என்ன அப்பா வீட்டுச் சொத்தா? நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, வடக்கும், தெற்கும் என அனைத்துப் பகுதியிலும் உள்ள மக்கள் ஐக்கியமாக வாழவேண்டும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ள வாக்குகளுக்காக இங்கிருந்து சென்று உறுதியளிக்கின்றனர். வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள், இதைப் பெற்றுக்கொடுப்போம் எனக் கூறி நாடாளுமன்றம் வருகின்றனர். 13 இனை வழங்குவோம் என வாக்குக் கேட்கும் நபர்களுக்கு தெற்கு மக்களும், வடக்கு மக்களும் வாக்களிக்கக்கூடாது" - என்றார். (அ-ம-44)

## தமிழர்...

இலங்கைக்கு ஒருநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று வியாழக்கிழமை வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று மாலை 5 மணியளவில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை நேற்று ஒரேமேசையில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே ஜெய்சங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். சந்திப்பில் கொழும்பு இந்தியத் தூதரக அதிகாரிகளும் உடனிருந்தனர்.

சுமார் அரை மணித்தியாலம் வரை குறித்த சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி, தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் கலந்துரையாடப்பட்டபோது இந்த விடயத்தில் மாற்றுக் கருத்துகள் காணப்படுவதாகத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார். தாம் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் நிலைப்பாட்டில் உள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரியப்படுத்தினார்.

கலந்துரையாடலின் நிறைவில் இலங்கைத் தீவில் தமிழருடைய தேசத்தையும், அதன் இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் சமஷ்டித் தீர்வை அடைந்துகொள்ள இந்தியா ஒத்துழைக்கவேண்டுமென வலியுறுத்தித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனால் எழுத்துமூலமான கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்று இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டது. (அ-ம-66-26-100)

## தமிழீழம்...

உறுப்பினருமான அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜூன் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்த விடயங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை என்பதால் அது தொடர்பில் அவரிடம் விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிறீதரன் எம்.பிக்கு எதிராகப் பொலிஸ் தலைமையகத்தில் முறையிட வந்த தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் ஒளிந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வெளியிட்ட கருத்து தொடர்பில் முறையிடவே வந்தேன். கடந்த 18 ஆம் திகதி சிறீதரன் எம்.பி. உரையாற்றி இருந்தார். வடக்கு - கிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் தலைமையகம் போன்றவை அகற்றப்படவேண்டும் என்பதே அவருடைய உரையின் பொருளாக இருந்தது. வடக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் காணாமற்போகின்றனர் என்பதை இதற்குக் காரணமாகக் கூறியுள்ளார். தமிழ் ஊடகவியலாளர்கள் காணாமற்போகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் சட்டக் கட்டமைப்பு உள்ளது. எனவே, பொலிஸார், இராணுவத்தினர் செயற்படவில்லையெனில், அநீதி இழைக்கப்படுகின்றதெனில் அது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மற்றும் இராணுவத் தலைமையகத்திடம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் முறையிட்டிருக்கலாம்.

நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி அவர் வெளியிட்டுள்ள தகவல் பாரதூரமானதாகும். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பில் மௌனம் காக்கின்றனர். இதன்மூலம் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது, பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்ற போலியான தகவல் வரலாற்றில் இடம்பெற்றுவிடும். கூறிய பொய்கள் உண்மையாகிவிடும். இது தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாகும். எனவே, சிறீதரன் எம்.பி.யிடம் விசாரணை நடத்தப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கே முற்படுகின்றனர். புலனாய்வாளர்களையும் அகற்றப் பார்க்கின்றனர். இது தொடர்பில் மௌனம் காப்பது ஏற்புடையது அல்ல. எனவேதான் சிவில் அமைப்பு என்ற அடிப்படையில் விசாரணைகோரி வந்துள்ளோம்.

வடக்கு - கிழக்குக்கு பொலிஸ் அதிகாரம் கோருகின்றனர். வடக்கு - கிழக்கை தனிப்பகுதியாக்கி, சர்வதேசத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு ஆயுதம் கொண்டு வந்து, தமிழீழம் அமைப்பதற்கே முற்படுகின்றனர்" - என்றார். (அ-ம-44)

## சாட்சியங்களைத்...

பெற்று வருகின்றது. இதன்போதே இலங்கை இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மேலும் தெரிவித்ததாவது:-

"உள்நாட்டு பொறிமுறைமூலம் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் கலந்துரையாடல்களில் வடக்கு - கிழக்கு அரசியல் கட்சிகள் உட்பட அனைத்துத் தரப்பினரின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் அலுவலகத்துக்கு இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரையில் 5 ஆயிரத்து 556 பேரால் 6 ஆயிரத்து 25 முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. 16 பேர் காணாமற்போனதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 11 பேர் உயிருடன் இருப்பதாக குழு கண்டுபிடித்துள்ளது. 4 பேர் தொடர்பாக வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன. ஆயிரத்து 709 முறைப்பாடுகள் தொடர்பில் காணாமற்போன சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் அலுவலகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில்நுட்ப உதவியுடன் சட்ட, முகாமைத்துவ, இரசாயனப் பகுப்பாய்வு போன்றவற்றையும் செய்து வருகிறது. சர்வதேச சமூகம் ஐ.நா. மனித உரிமைகள் கட்டமைப்பின் கொள்கைகளுக்கு எதிராக பக்கச்சார்பாகவும், இரட்டைத் தன்மையுடனும், அரசியல் மயப்பட்டதாகவும் செயற்படக்கூடாது என இலங்கை கேட்டுக்கொள்கிறது" - என்றார். இதேவேளை - இணைத்தலைமை நாடுகள் சார்பில் பிரிட்டன் தூதுவர் ரீட்டா பிரெஞ்ச் தெரிவிக்கையில்;

"இலங்கையின் நிலைமாறுகால நீதி தொடர்பான விசாரணைகள் சுயாதீனமானதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாகவும் இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார். (அ-ம-6)

## யாழ்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பல்கலைக்கழகத்தை முடக்கி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்துமாறும், இதர கொடுப்பனவுகளை வழங்குமாறும் வலியுறுத்தி பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இந்த வருடத்தில் கொடுப்பனவுகள் மற்றும் ஊதிய உயர்வுக்குச் சாத்தியம் இல்லை என்று ஜனாதிபதி ரணில் அறிவித்துள்ளபோதிலும் கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சியாகவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், பல்கலைக்கழகத்தை முடக்கி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் தொடர்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் தங்கராஜா மேலும் தெரிவித்ததாவது:-

12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ, உயர்கல்வி அமைச்சோ எம்மைக் கவனத்திற்கொள்ளவில்லை. 2016 ஆம் ஆண்டுமுதல் நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். இந்தப் போராட்டத்தில் சம்பள அதிகரிப்பினையும் சம்பள நிலுவையினையும் வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எமக்கு வாக்குறுதிகளை வழங்கி தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது. எனவே எமது கோரிக்கைகள் செவிசாய்க்கப்படும் வரையில் போராட்டத்தை நாம் முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-125)

## ஆதரவற்ற...

நேற்று இடம்பெற்றுள்ளது. இந்திராணி என்று ஊர்மக்களால் அறியப்படும் அந்தப் பெண் நேற்றுமுன்தினம் காலை திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அந்தப் பெண்ணின் சடலத்தைப் பொறுப்பேற்ற இளைஞர்கள் அவருக்கு நேற்று மாலை இறுதிச்சடங்கை நிறைவேற்றியுள்ளனர்.

பிடாரிஅம்மன் கோவிலடி சனசமூக நிலையத்தில் சடலம் வைக்கப்பட்டு ஊர் மக்களினதும் இளைஞர்களினதும் அஞ்சலியைத் தொடர்ந்து அவரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குக்குரிய அத்தனை ஏற்பாடுகளையும் பெரும் நிதிச் செலவில் இளைஞர்கள் முன்னின்று நடத்தியுள்ளனர். இளைஞர்களின் இந்த முயற்சியையும் முன்மாதிரியான நடவடிக்கையையும் பாராட்டிய ஊர்மக்கள் தம்மாலான நிதிப் பங்களிப்பையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கம் மற்றும் தெல்லிப்பழைக் கூட்டுறவு மருத்துவமனையின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கான, தொற்றாநோய் தொடர்பான இலவச மருத்துவ முகாம் நிகழ்வு, யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத் தலைவர் இ.சுரேந்திரநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. (ப-66)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66-22)

# ஆனைக்கோட்டை அகழ்வு நேற்று முதல் ஆரம்பம்!

பெருங்கற்காலப் பண்பாட்டை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக்கூடிய வகையிலான சான்றுகள் கிடைக்கப்பெறும் எனநம்பப்படும் ஆனைக்கோட்டையில், நேற்றுமுதல் அகழ்வுப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கையின் பெருங்கற்கால பண்பாடுகள் நிறைந்ததாகக் கருதப்படும் ஆனைக்கோட்டையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு பகுதியில் இந்த அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்களான இரகுபதி மற்றும் இந்திரபாலா ஆகியோர் 1980 ஆம் ஆண்டுகளில் முன்னெடுத்த அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் பெருங்கற்கால பண்பாடு என உறுதிப்படுத்தும் வகையில் சான்றுப்பொருள்கள் கிடைத்திருந்தன.

இந்த நிலையில் புலம்பெயர் நிதிப் பங்களிப்புடன் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், தென்னிலங்கை தொல்லியல்துறை பேராசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், தொல்லியல் பணிமனை அதிகாரிகள் இந்த அகழ்வுகளில் பங்கெடுக்கவுள்ளதோடு யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினரும் இந்த அகழ்வுப்பணிகளில் இணையவுள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஷ்பரட்ணம், தொல்லியல் திணைக்கள முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிமால் பெரேரா, முன்னாள் மத்திய கலாசார நிதிய திட்டப்பணிப்பாளர் லக்ஷ்மன், யாழ்ப்பாண மரபுரிமை மைய செயலாளர் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ரமேஷ், வரலாற்றுத் துறைதலைவி சாந்தி அருளானந்தம், தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், தொல்லிய திணைக்கள அதிகாரிகளான மணிமாறன், கபிலன், பல்கலைக்கழக மாணவர்கள், வலி.தென்மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் ஜெபநேசன் உட்படப் பலரும் நேற்றைய பூர்வாங்க நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (அ-ம-125)

வீடு வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் வீடு வாடகைக்குண்டு.

T.P.: 077 306 8993

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

CS(777) J-1

வேலை வாய்ப்புகள்

Counter Staff, Store Keeper, Delevery Rider, Computer Operator, Maintanance Staff,
காசாளர், கிளாக், விற்பனையாளர், உதவியாளர்.

தொடர்புகளுக்கு:

077 773 3368, 074 083 3368

(CS 784) V-1

## விபத்தில்...

உயிரிழந்தவராவார்.

கடந்த 13 ஆம் திகதி அந்த இளைஞர் மோட்டார்சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தபோது, வீதியில் இருந்த கல்லுடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-9)

## பல்லாயிரம்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் முத்தேர் பவனி நேற்று வியாழக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 7 மணியளவில் வசந்த மண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து நாகபூஷணி அம்மன், விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் திருநடனத்துடன் உள்வீதியில் எழுந்தருளினர்.

பல நூற்றுக்கணக்கான சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு, சிறப்புத் தீபாராதனை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க காலை 9 மணியளவில் முத்தேர் பவனி ஆரம்பமானது.

பிரதான தேரின் வடத்தை ஆண் அடியவர்களும், பெண் அடியவர்களும் இணைந்து இழுத்தனர். முத்தேர்களும் முற்பகல் 10.30 மணியளவில் இருப்பிடம் சென்றடைந்தன.

முத்தேர் பவனி இடம்பெற்றபோது நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பறவைக் காவடிகள் மற்றும் செதில் காவடிகள் எடுத்தும், மாதர்கள் பலரும் அடியழித்தும், கற்பூரச் சட்டிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

இன்று வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும், இன்று மாலை திருவூஞ்சலும், நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை இரவு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தெப்போற்சவம் நடைபெறவுள்ளன.

(அ-ம-125-66)

## நெடுந்தீவில்...

நெடுந்தீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அன்ரன் ஜீவராஜ் அமல்ராஜ் (வயது - 23) என்ற இளைஞரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இளைஞர்களிடையே ஏற்பட்ட முரண்பாடே கொலைக்குக் காரணம் என முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை - சந்தேகத்தின் அடிப்படையில் நெடுந்தீவில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-125)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 02 . 1964



இறப்பு
20 . 06 . 2024

### செல்வி மாலதி சிவராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
யா/ உயரப்புலம் மெதடிஸ்தமிசன் வித்தியாலயம்)

கொக்குவிலை பிறப்பிடமாகவும், அமுதசுரபி பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மாலதி சிவராசா நேற்று (20.06.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 782) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.